**<u>நீதித்துறை நடுவர் நீதிமன்றம், இரணியல்</u>**

முன்னிலை திரு. **A.S.அமீர்தீன்,** **B.A.,B.L., LLM.,D.JJJ.Psy.,**

நீதித்துறை நடுவர்

**2025** ஆம் ஆண்டு **நவம்பர்** மாதம் **13**ஆம் நாள் **வியாழக்கிழமை**

**<u>Crl.M.P.No.7447/2022</u>**

ரசல்ராஜ் (வயது 63/2022) ............... மனுதாரர் /நிகழ்நிலை புகார்தாரர்
த/பெ. நலீன்நாடார்
நடுகாட்டுவிளை, ஆப்பிக்கோடு
தொலையாவட்டம் அஞ்சல்

/எதிர்/

உதவி காவல் ஆய்வாளர், ................ எதிர்மனுதாரர்
கருங்கல் காவல் நிலையம்,
கன்னியாகுமரி மாவட்டம்.
குற்ற எண் 473/2020

கடந்த 09.09.2022 ஆம் தேதி இந்நீதிமன்றத்தால் மேற்படி காவல் நிலைய குற்ற எண்ணில் தாக்கல் செய்யப்பட்ட பொருண்மை தவறு என்ற அறிக்கையில் ஆட்சேபனை கேட்கும் பொருட்டு இந்நீதிமன்றம் நிகழ்நிலை புகார்தாரருக்கு மேற்படி எண்ணில் கோப்பிற்கு எடுக்கப்பட்டு அறிவிப்பு அனுப்பப்பட்டதில் 10.01.2025 ஆம் தேதி நிகழ்நிலை புகார்தாரர் முன்னிலையாகி அவரது தரப்பில் இலவச சட்ட உதவி வழக்கறிஞர் **திருமதி.J.ஜோஷிபா** அவர்கள் முன்னிலையாகி ஆட்சேபனை கேட்கப்பட்டு அதன் அடிப்படையில் இந்நீதிமன்றம் பிறப்பிக்கும் .........

**// உத்தரவு //**

1. நிகழ்நிலை புகார்தாரர் கருங்கல் காவல் நிலையத்தில் சொத்து பிரச்சனை சம்மந்தமாக வழக்கானது தங்களுக்கு ஆதரவாக O.S.No. 347/1956ன்படி தீர்பளிக்கப்பட்டதில் குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் இடையூறு செய்து அதில் 13.08.2020 ஆம் தேதி மாலை 04.30 மணிக்கு தன்னையும், தனது மனைவியையும் தாக்கி காயப்படுத்தியதாகவும், அதற்காக கருங்கல் காவல் நிலையத்தில் புகார் கொடுத்த போது அவர்கள் முறையாக நடவடிக்கை எடுக்காததால் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் மூலமாக நடவடிக்கை எடுத்து அதன் மூலம் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது

SYEDMOHAMED AMEER DHEEN
Digitally signed by SYEDMOHAMED AMEER DHEEN
Date: 2025.11.13 19:12:38 +0530

என்றும், ஆனால் மேற்படி இறுதி அறிக்கையானது பொருண்மையில் தவறு என்று முடிக்கப்பட்டது ஆவணங்களிலிருந்து தெரிய வருகிறது. அதுகுறித்து ஆட்சேபனை கேட்கப்பட்டது.

2. நிகழ்நிலை புகார்தாரர் தரப்பில் சமர்பிக்கப்பட்ட ஆட்சேபனை அடிப்படையில் பரிசீலிக்கையில் மேற்படி புகார்தாரரும், அவருடைய மனைவியும் வழக்கில் காயம்பட்டுள்ளார்கள் என்பது புலன்விசாரணை அதிகாரி தாக்கல் செய்த குற்ற இறுதி அறிக்கையில் வெளிப்படையாக தெரியவருகிறது. ஒரு நபர் காயம் அடைந்துள்ளார் என்ற நிலையில் மேற்படி காயம் யாரால்? எப்போது? எங்கு வைத்து? எந்தமுறையில்? ஏற்படுத்தப்பட்டது என்ற சங்கதியானது மேற்படி சம்பவத்தின் போது உடனிருந்த சம்பவத்தை பார்த்த சம்பவத்தில் பாதிப்படைந்த நபர்களால் மட்டுமே தெளிவாக கூறமுடியும் என்பதும், இவ்வழக்கில் மேற்படி குற்றம் சுமத்தப்பட்ட நபர் கொடுத்த வழக்கானது விசாரணைக்கு எடுக்கப்பட்டதாகவும், நிகழ்நிலை புகார்தாரர் கொடுத்த புகாரானது பொருண்மையில் பிழை என்று முடிக்கப்பட்டதாகவும், தான் சொன்ன சாட்சிகளை விசாரணை செய்யாமல் பட்டியலில் சேர்க்காமல் புலன்விசாரணை அதிகாரி ஒரு மனசாய்வுடன் செயல்பட்டார் என்றும், ஆட்சேபனையில் தெரிவிக்கப்பட்டது.

3. வழக்கு ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டதில் மேற்படி நிகழ்நிலை புகார்தாரர் காயமடைந்துள்ளார் என்பது வெளிப்படையாக தெரிகிறது. மேற்படி நிகழ்நிலை புகார்தாரர் காயமடைந்துள்ளார் என்பதும், மேற்படி காயம் குறித்த சங்கதியானது முழுமையான வழக்கு விசாரணைக்கு பின்பே தெரியவரும் என்பதும், மேற்படி வழக்கு சம்பவ இடத்தில் சாட்சிகள் இருந்ததாக சொன்னதை பொறுத்து மேற்படி சாட்சிகளை முழுமையாக மீண்டும் விசாரித்து இவ்வழக்கில் மேல் விசாரணை செய்தால் மட்டுமே அதன் உண்மை தன்மையை அறிய முடியும் என்பதும், அதன் அடிப்படையில் மேற்படி ஆட்சேபனையானது கருத்தில் கொள்ளப்பட்டு இந்நீதிமன்றம் மேற்படி வழக்கில் மேல்விசாரணைக்கு உத்தரவிடுகிறது.

SYEDMOHAMED AMEER DHEEN

Digitally signed by SYEDMOHAMED AMEER DHEEN
Date: 2025.11.13 19:12:45 +0530

4. அதன் அடிப்படையில் இவ்வுத்தரவு கிடைத்தவுடன் சம்மந்தப்பட்ட காவல் நிலையத்தில் உள்ள காவல் ஆய்வாளர் அவர்கள் நேரடியாக மேற்படி வழக்கு மேல் விசாரணையை தொடங்கி மேற்படி நிகழ்நிலை புகார்தாரர் மற்றும் அவர் தரப்பில் புதிய சாட்சிகள் யாரேனும் இருப்பின் அவர்களையும் விசாரணை செய்து உரிய காலத்திற்குள் சட்டம் வழங்கிய கால வரையறைக்குள் அறிக்கை தாக்கல் செய்ய உத்தரவிடப்படுகிறது.

முடிவாக இம்மனு அனுமதிக்கப்படுகிறது.

இவ்வுத்தரவு வாய்மொழியாக சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு பின்னர் **2025** ஆம் ஆண்டு **நவம்பர்** மாதம் **13** ஆம் நாள் என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

SYEDMOHAMED AMEER DHEEN

Digitally signed by SYEDMOHAMED AMEER DHEEN
Date: 2025.11.13 19:12:50 +0530

நீதித்துறை நடுவர்
இரணியல்

Judicial Magistrate Court, Eraniel

Court Seal

“The parties shall apply, as soon as possible, for the return of all exhibits which they may wish to preserve, as the record will be liable to be destroyed after three years from this date”.

Copy To

காவல் ஆய்வாளர்
கருங்கல் காவல் நிலையம்
கருங்கல்